## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# இளைஞர் முகாம் – 2020

இளைஞர்களை மனித உரிமைகள் தொடர்பாக உணர்வூட்டுவதற்கும் நாட்டினுள் மனித உரிமைகள் கலாச்சாரத்தை கட்டியெழுப்புவதற்குமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இளைஞர் முகாமொன்றினை நாடாத்துவதற்கு எண்ணியுள்ளது. அத்துடன் இளைஞர்கள் முன்னின்று செயற்படும் பிரஜையாக்குவதற்கு வழிப்படுத்துவும் இம்முகாமை ஏற்பாடு செய்துள்ளது. ஆணைக்குழுவானது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வெற்றிகரமாக இளைஞர் முகாமை நடாத்தியுள்ளது. இந்த ஆண்டு இளைஞர் முகாம் முக்கியமாக கோவிட் 19 தாக்கமும் இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் மையமாகக் கொண்டுள்ளது. இலங்கையின் 25 மாவட்டங்களிலிமிருந்தும் இளைஞர்கள் அழைக்கப்படவுள்ளனர். இவ்விளைஞர் முகாமினூடாக பங்குபற்றுனர்கள் ஓர் அனுபவ கற்றல் முறைமையினை பின்பற்றுவதுடன் பல்லினக் கலாசாரக்கற்றல் மற்றும் மனித உரிமைகள், வரையறைக்குள்ளான கலந்துரையாடலுக்குரிய அறிவாற்றலைப் பெற்றுக்கொள்வர். இவ்வாண்டுக்கான இளைஞர் முகாமானது கோவிட் 19 தொற்றுநிலைமை காரணமாக இணையவழி மற்றும் நேருக்கு நேரான அமர்வுகளை உள்ளடக்கியுள்ளதுடன் கட்டாயமான செயற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது

**இளைஞர் முகாமின் பிரதான நோக்கங்களாவன ( தனிப்பட்ட, அமைப்பு மற்றும் நிர்வாக ரீதியான)**

- மனித உரிமைகள், பல்வகைத்தன்மை மற்றும் பன்மைத்துவம், கலாசாரங்களிற்கிடையிலான கற்கை மற்றும் கலந்துரையாடல் உள்ளடங்களாக தனிப்பட்ட மற்றும் கூட்டு அடையாளங்களை தர்க்கரீதியாக விளங்கிக்கொள்ளல் மற்றும் வெவ்வேறு மனித உரிமைகள் சூழ்நிலையில் அவர்களின் வகிபங்கு தொடர்பாக பங்குபற்றுனர்களின் அடிப்படை திறன்களை மற்றும் விழிப்புணர்வை விருத்தி செய்தல்

- ஒன்றாக கற்பதற்கும் வாழ்வதற்க்குமானே பாதுகாப்பானதும் நேர்மறையானதுமான உபாயத்திட்டங்களை விருத்தி செய்தலும் பங்குபற்றுனர்கள் மனித உரிமை விடயங்கள் மற்றும் மீறல்கள் தொடர்பாக தமது தனிப்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல்.

- இளம் சமுதாயத்தோடு இணைந்து மனித உரிமைகளுக்காக எழுந்து நிற்கும் முன்மாதிரியான தலைவர்களாகவும் அர்ப்பணிப்பான செயற்பாட்டாளர்களாகவும் தொடர் முன்னெடுப்புக்களை அமுல்படுத்தும் வகையில் பங்குபற்றுனர்களை ஊக்கப்படுத்தலும் ஒத்தாசை நல்குவதுமாகும்.

- கல்வி உரிமை, பொருளாதார உரிமை மற்றும் உளநல நல்வாழ்வு தொடர்பாக இளைஞர்களுக்கு கற்பித்தல்

- சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மை மற்றும் சமூக பொருளாதார கலாசார உரிமைகள் சம்பந்தமாக பரஸ்பர அமுலாக்கத்தின் முக்கியத்துவத்தை அவர்களின் விளங்கிக்கொள்ளலை விரிவுபடுத்தல்.

- கோவிட் 19 சூழ்நிலையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அது தொடர்பான கருத்தாடல்கள் பற்றி தங்களது சமூகங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகள் மற்றும் அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதும் அதனை ஊக்கப்படுத்தவும்.

மனித உரிமைகள், சமூக சகவாழ்வு மற்றும் பல்லினக் கலாசாரம் தொடர்பான கருத்தாடல்களை இளைஞர்களைக்கொண்டு வலுவூட்டுவதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வகிபங்கை உறுதிப்படுத்தல்.

## இளைஞர் முகாமில் பங்குபற்றுவதற்கான தகைமையும் தெரிவுசெய்யும் முறைமையும்

இவ்விளைஞர் முகாமானது, 25 மாவட்டங்களிலிருந்தும் இளைஞர்களை தெரிவு செய்யவுள்ளது.

- வெவ்வேறுபட்ட இன மற்றும் மதக் குழுக்கள்
- ஏனைய குழுக்களான
  - தெழுங்கு மொழி பேசுவோர்
  - ஆபிரிக்க இனச் சமூகத்தினர்;
  - பழங்குடி மக்கள்
  - பெருந்தோட்டத்துறை சார்ந்த மக்கள்
  - இயலாமையுடைய நபர்கள்;
  - புவியியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்ட மக்கள்
  - LGBTIQ சமூகத்தினர்

## சகல பங்குபற்றுனர்களும் கட்டயாமாக

- 18 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்;
- சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் ஏதேனும் ஒரு மொழியில் செயற்படக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்
- கணனி மற்றும் எண்ணியல் அறிவு இருத்தல் வேண்டும்
- இளைஞர் முகாமில் இறுதிவரை இணைந்திருப்பதுடன் கட்டாயமாக செயல் வேலைகள், இணையவழி மற்றும் நேருக்கு நேர் அமர்வுகளில் முழு ஈடுபாட்டுடன் பங்கு பற்றுதலும் வேண்டும்

- கட்டாயமான செயல் வேலைகள், இணையவழி அமர்வுகளை முழுமையாக நிறைவு செய்தல் வேண்டும். முழுமையாக நிறைவு செய்த பங்கு பற்றுனர்களையே நேருக்கு நேர் அமர்விற்கு தெரிவு செய்யப்படுவர்

- ஆர்வமுடையவராகவும் திறந்த மனதையுடையவராகவும் பன்முகத்தன்மையையும் பன்மைத்துவத்தையும் போற்றுகின்ற மற்றும் ஒவ்வொருவருடைய யதார்த்தத்தையும் கற்றுக்கொள்பவராகவும் இருத்தல் வேண்டும்

- இளைஞர் முகாமின் குறிப்பாக மனித உரிமைகள், பன்முகத்தன்மை மற்றும் பன்மைத்துவம் மற்றும் கலாச்சாரங்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் போன்ற அனுகுமுறைகள் மற்றும் பெறுமதியினை பிரயோகிக்கவும் கற்றுக்கொள்ளவும் ஊக்கமுள்ளவராதல் வேண்டும்

- இம்முகாம் செயற்பாட்டினை தொடர்ந்து மனித உரிமைகளை பாதுகாக்கவும் முன்னேற்றவும் இளைஞர் முன்னெடுப்பபுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஊக்கமளித்தலும் அவர்களின் சமூகத்தில் மனித உரிமைகளை பாதுகாக்கவும் முன்னேற்றவும் தனியாகவோ அல்லது சமூகமாகவோ ஈடுபடுபவராக இருத்தல் வேண்டும்.

- தனது கடமைகள் பற்றிய பொறுப்புணர்ச்சியுடையவராகவும் தனிநபர் மற்றும் சமூக மேம்பாடு தொடர்பாக பங்களிப்புச் செய்தல் என்பதோடு ஏனைய பங்குபற்றுனர்களுடன் இணைந்து செயற்படக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

இந்நிகழ்வின் போதும் அதன் பின்னரும் மனித உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பில் இளம் பிரஜைகளின் பங்களிப்பை வழங்குவதை இலகுவாக்கும் முறையில் நிறுவனங்கள், வலையமைப்புக்கள். அமைப்புக்கள் போன்றவற்றில் முறைசார்ந்த அல்லது முறைசாராக் குழு அங்கத்தினராதல் வேண்டும்.

## செலவுகள்

- இளைஞர் முகாமின் நேருக்கு நேர் அமர்வு இடம்பெறும் காலப்பகுதியில் பங்குபற்றுனர்களின் தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் ஒழுங்கு செய்யப்படும் என்பதோடு அச்செலவீனங்களையும் இவ்வாணைக்குழுவே பொறுப்பேற்றுக்கொள்ளும்.

• ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கமைவாக பிரயாணச் செலவுகளிற்குரிய பற்றுச்சீட்டுக்களை சமர்பிப்பதன் மூலமாக பிரயாணச் செலவிற்கான பணத்தை மீளப்பெற்றுக்கொள்ள முடியும். குறித்த முகாமிற்கு முழுமையாக பங்குகொள்ளும் பங்குபற்றுனர்களுக்கே அவர்களுக்கான போக்குவரத்துச் செலவுக்கான பணம் இறுதி நாளன்று வழங்கப்படும்.

• இணையப்பாவிப்புக்கான டேடா செலவுத் தொகையாக ரூபா 500.00 வழங்கப்படும்

• இம்முகாமிற்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளிற்கு மேலதிக விபரங்கள் பின்னர் வழங்கப்படும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது?**

• விண்ணப்பங்களை ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து (www.hrcsl.lk) தரவிறக்கம் செய்யலாம் அல்லது அந்தந்த பிரதேச செயலகங்களில் அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

• விண்ணப்பங்களை 30 செப்டம்பர் 2020 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயங்கள் அல்லது இல. 14, ஆர் ஏ தி மெல் மாவத்தை, கொழும்பு 04 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்விக்கும் விசேட நிகழ்விற்குமான பிரிவிற்கு சமர்பிக்கலாம் அல்லது youthcamp.hrcsl@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் அனுப்பி வைக்கலாம்.

• தெரிவானது இவ்வாணைக்குழுவால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவால் மேற்குறிப்பிட்ட தெரிவு செய்யும் முறைமைக்கமைய அவர்களின் திறமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்;.

• உங்களுக்கு ஏதேனும் மேலதிக தகவல்கள் அல்லது விளக்கங்கள் தேவைப்படின் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கழுவின் கல்விக்கும் விசேட நிகழ்விற்குமான பிரிவினை 0112505569 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு